# Deposition of Witness

**(Chapter XXIII Code of Criminal Procedure )**

**In the Court of Judicial Magistrate No.III Cuddalore.**

| | |
|---|---|
| Case Number | : C.C.No.38/ 2018 |
| Police Station | : DCB - P.S |
| Deposition of witness for Prosecution | : LW1 / PW1 |
| Name | : அறிவழகன் |
| Father Name/Husband Name | : அன்பு |
| Village | : |
| Cuddalore | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 விதிமுறைகளின் படி 22.02.2023 நாளாகிய இன்று திரு. ஜி. இரகோத்தமன், M.A.,L.L.M., நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.3, கடலூர் அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

எதிரிகள் ஆஜர்இல்லை. மனுத்தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

<u>**முதன்மை விசாரணை**</u>

01. **நான் தற்போது** பெரியகங்கணாங்குப்பத்தில் வசித்து வருகிறேன். நான் Villupuram Post Office RMS Sorting Assistant ஆக வேலை செய்து வருகிறேன்.எனக்கு எதிரிகள் வனிதாதேவி மற்றும் ஆனந்தகுமார் இருவரையும் தெரியும். நான் B.E Mechanical படித்துள்ளேன். கடந்த 2011 ம் ஆண்டு நான் படித்து முடித்துவிட்டு வேலை தேடிக்கொண்டிருந்தேன். அப்போது நண்பர்களான ஜெயராமன் மற்றும் அன்பு அவர்களின் மூலமாக வெளிநாட்டில் வேலை வாங்கி தருவதாக கடலூர் கூத்தப்பாக்கத்தை சேர்ந்த வனிதாதேவி அறிமுகமானார். 1வது எதிரியான வனிதாதேவி என்னிடம் Canada Jamison Consultancy என்ற நிறுவனத்தில் வேலை வாங்கி தருவதாக கூறி என்னிடம் ரூ.75,000/- செலவாகும் என்று கூறினார்.

02. அதற்காக முதலில் ரூ.25,000/- பணத்தை அவரிடம் அவரின் வீட்டில் வைத்து நான் கொடுத்தேன். அவருடன் அவரது தம்பி ஆனந்தகுமார் இருந்தார். பிறகு 01.09.2011 அன்று மேற்சொன்ன நிறுவனத்தில் இருந்து Confirmation Report வந்துள்ளதாக கூறி மேலும் ரூ.50,000/- தருமாறு கூறினார். அதற்கு சாட்சியாக ரூ.75,000/- அவரின் கையொப்பம் பெற்ற ஆக்ஸிஸ் பேங்க் காசோலையை என்னிடம் வழங்கினார். அதை நம்பி அதே வருடம் டிசம்பர் மாதம் மீதி ரூ.50,000/- தொகையை அவரின் வீட்டில் வைத்து அவரிடம் கொடுத்தேன். அப்போது அவருடன் அவரது தம்பி

ஆனந்தகுமார் இருந்தார்.

**( 01.09.2011 தேதியிட்ட Jamision பெயரில் உள்ள கனடா கம்பெனியின் போர்ஜெரி Confirmation Report** அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)

03. என்னிடம் காண்பிக்கப்படும் காசோலை தான் எதிரி வனிதாதேவி எனக்கு வழங்கினார். **( தேதியிடப்படாத எதிரி வனிதாதேவி அ.சா.1க்கு வழங்கிய கடலூர் ஆக்ஸிஸ் வங்கி காசோலை எண்.007451 அசல் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

04. பணம் கொடுத்து பல மாதங்கள் ஆகியும் வேலை சம்மந்தமாக சரியான தகவல் அவர் அளிக்கவில்லை. மேலும் அவர் வழங்கிய Confirmation Report போலி என தெரிந்தது. மேலும் அவரை விசாரித்ததில் என்னை போல கோதண்டராமன், கார்த்திகேயன், மாணிக்கம், விஜயபாலன் போன்றோர்களிடம் அவர் வெளிநாட்டில் வேலை வாங்கித்தருவதாக மோசடி செய்தது தெரியவந்தது. அதனால் நான் 27.04.2013 அன்று கடலூர் காவல் கண்காணிப்பாளர் அவர்களிடம் புகார் மனு அளித்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் நான் கொடுத்தது தான். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான்.

05. **(27.04.2013 தேதியிட்ட அ.சா.1ன் புகார் அசல் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** அதே தேதியில் என்னை மாவட்ட கடலூர் குற்றப்பிரிவு போலிசார் விசாரணை செய்தனர். அவர்களிடம் நான் வைத்திருந்த Confirmation Report மற்றும் வனிதாதேவி எனக்கு அளித்த ஆக்ஸிஸ் பேங்க் காசோலை ஆவணங்களை அளித்தேன். இவ்வழக்கு சம்மந்தமாக கடலூர் மாவட்ட குற்றப்பிரிவு போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

வாய்ப்பளித்தும் இல்லை.

**மறுவிசாரணை இல்லை.**

Taken down by me Certified that contains a true and correct statement made by the Accused read over and admitted by the / him to the correct.

Sd- G. Ragothaman, M.A.L.L.B.,
Judicial Magistrate No.III,
Cuddalore.